கொண்டு போய் நிறுவி விட்டார்கள். ஜப்பான் நாட்டு உடனுழைப்புடன் சென்ட்ரல் பிஷரிஸ் கார்ப்பரேஷனுடைய முதலீட்டைக் கொண்டு இதனை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கே. பி. எஸ். மணி : கடந்த கால சர்க்கார் இருந்த காலத்திலும் சரி, இன்றைய சர்க்கார் காலத்திலும் சரி, மத்திய சர்க்கார் தென்னகத்திலே ஆரம்பிக்கப்பட வேண்டிய பல தொழில்களை ஆரம்பிக்காமலும், அனுமதி கொடுக்காமலும் ஏதாவது காரணத்தைச் கூறி தடை செய்து கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நிவர்த்தி செய்ய வழி முறை இல்லையா? நம்முடைய சர்க்காரே இவற்றை மேற்கொண்டு செய்வதற்கு இருக்கின்ற நடைகள் என்ன?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இதற்கு இருக்கின்ற ஒரே வழி முறை எல்லாக் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து அந்தக் கோரிக்கைகளை வலியுறுத்துவதுதான்.

உணவு தானியங்கள் கடத்தல்

* 417 வினா—திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:
திரு. ஏ. எம். ராஜா:
திரு. கே. விநாயகம்: } மதிப்பிற்குரிய

விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உணவுப் பொருள் பதுக்கலைத் தடுக்க மாநிலம் முழுவதும் அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், புதிய அரசாங்கம் பதவி ஏற்றபின் இதுவரை பிடிபட்டுள்ள நெல், அரிசி இவைகளின் அளவு என்ன ?

(உ) அரசாங்கத்தின் கொள்முதல் திட்ட அளவு என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) 6-3-1967 முதல் 25-5-1967 வரை, உணவு வழங்குத் துறைப் பணியாளராலும் போலீசினாலும் கீழ்க்கண்ட அளவுள்ள உணவு தானியம், மண்ணெண்ணெய், உரம் முதலியன கைப்பற்றப்பட்டன:—

(1) நெல் 13,353.57 குவின்டல்

(ஒவ்வொன்றும் 75 கி.கி. கொண்ட 17,805 மூட்டைகள் அல்லது 11,81,732 பட்டணம் படி.)

(2) அரிசி 2,982.98 குவின்டல்.

(ஒவ்வொன்றும் 75 கி.கி. கொண்ட 3,977 மூட்டைகள் அல்லது, 1,96,242 பட்டணம் படி.)

(3) சிறு தானியங்களும் ஏனைய உணவு தானியங்களும் 643.73 குவிண்டல்.

(4) மண்ணெண்ணெய்	380 லிட்டர்.	
(5) யூரியா (உரம்)	20 குவின்டல்	
(6) ஏனைய உரங்கள்	2,018 மூட்டைகள்	

	ரூ.
மேற்சொன்ன பொருள்களின் மொத்த மதிப்பு	13,30,846
கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை	303
தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	256

(உ) 1967-ம் ஆண்டிற்கு 8 லட்சம் டன் அரிசி.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, பதுக்கலைத் தடுக்க பதுக்கல்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து தண்டனை அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பதுக்கல்காரர்கள் மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறது.

திரு. கே. விநயகம் : அமைச்சர் அவர்கள் கொடுத்த கணக்கு பதுக்கல் பற்றியதா அல்லது கொள்முதலுக்குக் கொடுக்காதது பற்றியா ? பதுக்கல் செய்வது தவறுதான். எந்தச் சட்டத்தின் அடிப்படையிலே—கிரிமினல் புரொசிஜர் கோட் அடிப்படையிலா அல்லது கிரெயின் ஹோர்டிங் அபென்ஸ் சட்டத்தின் அடிப் படையிலா—பதுக்கல் செய்கிற குற்றவாளிகள் தண்டிக்கப்படுகி றார்கள் ? இதுவரை எத்தனைபேர் மீது வழக்கு தொடுக்கப்பெற்று வழக்கு மன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கடத்தல் செய்கின்ற உணவுப் பொருள்கள், யூரியா போன்ற உர வகைள் ஆகியவற்றை யும், கொள்முதலுக்குக் கொடுக்காமல் பதுக்கி வைத்திருப்பவர் களிடமிருந்தும் அரசாங்கம் கைப்பற்றி வருகிறது.

திரு. என். சங்கரய்யா : உணவு தானியப் பதுக்கலுக்குப் பிரதானமாக, ஆதாரமாக உள்ளவர்கள் பெருநில உடைமையாளர் கள்தான். ஆகவே, இந்த அரசாங்கம் ஏற்கனவே வெளியிட்ட கொள்கைக்கு ஏற்ப, பத்து ஏக்கருக்கு மேல் வைத்திருக்கக்கூடிய நில உடைமையாளர்களிடமிருந்து மார்க்கெட்பிள் சர்ப்ளஸ் முழு வதையும் கொள்முதல் செய்வதற்கு வழி செய்தால் பதுக்கல் இல்லாமல் போகும் என்பதால் அதுபற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அரசாங்கம் கொள்முதல் விஷயத்தில் கனம் அங்கத்தினர் கொண்ட கருத்தைத்தான் நிறை வேற்றி வருகிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இந்த மாதிரிப் பதுக்கல் ஏன் ஏற் படுகிறது என்றால் அடிக்கடி திடீரென்று கலெக்டர்கள் தடை விதிப்பதும், உசிதம் போல் நீக்குவதுந்தான். அதோடு விவசாயி

1967 நவம்பர் 24]

களுக்கு அரசாங்கம் கொடுக்கும் விலையைக் காட்டிலும் வெளி மார்க்கெட்டில் அதிகமான விலை இருக்கும் காரணத்தாலும் இந்த நிலை ஏற்படுகிறது. ஆகவே, கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுத்தால் இந்தப் பதுக்கல் குறையும் என்பதை அரசாங்கம் உணருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்களுடைய கேள்வி அரசாங்கத்திற்கு உதவி புரிவதாக அமைந்திருக்கிறது. கொள்முதலுக்காகச் சர்க்கார் கொடுக்கும் விலையைப் பொறுத்தவரை நியாயமானதா இல்லையா என்பதற்கு மத்திய உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் கூறியதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் அறிந்திருப்பார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அமைச்சர் அவர்கள் இது விவசாயிக்குக் கட்டுப்படியாகின்ற விலை இல்லை என்று விவசாயி சொல்லுவதை ஏற்றுக் கொண்டார்களா ? இதற்கு மட்டும் மத்திய அமைச்சரைச் சுட்டிக் காண்பிப்பதா ? விவசாயிகள் கூறுவதைப் பற்றி அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : விவசாயிகளுடைய கோரிக்கை தெரிந்துதான் இருக்கிறது. இன்றையதினம் உணவு உற்பத்தி விஷயத்தில் செலவு அதிகம் ஆகிறது என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் அதே சமயத்தில் விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா நன்மைகளையும் அரசாங்கம் செய்து வருகிறது. ஆடுதுறை நெல்லை விளைவித்ததன் மூலம் ஒன்றுக்கு மூன்று பங்கு விளைச்சல் ஏற்பட்டு அதனால் விவசாயிகள் லாபத்திலே சிறிது நஷ்டம் ஏற்படுகிறது என்ற நிலையிலே இருக்கிறார்களே தவிர அவர்களுக்கு நஷ்டம் ஒன்றும் ஏற்படவில்லை. இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர்த் தீர்வை நீக்கப்பட்டிருக்கிறது. உரம் காலா காலத்தில் கிடைப்பதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. பூச்சி மருந்துகளுக்குக் கொடுத்து வந்த மானியம் 25 சதவிகிதத்திலிருந்து 35 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. கடன்கள் காலத்தில், ஒரு மாதத்திற்குள்ளாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இ.ஓ. (அக்ரிகல்சர்) விவசாயிகளுடன் நெருங்கிப் பழகும் நிலைமை ஏற்பட்டு பல நல்ல காரியங்களைச் செய்யக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பொதுவாக எல்லா விவசாயிகளும் மன நிம்மதியுடன் கொள்முதலுக்குக் கொடுத்து வருகிறார்கள்.

திரு. எம். எஸ். மணி : கனம் விவசாய அமைச்சர் அவர்கள் 18-ஆம் தேதி திருச்சி வந்திருந்தபோது திருச்சியிலிருந்து நெல் கடத்திக் கொண்டு போகப்படுகிறது என்ற புகார் கொடுக்கப்பட்டது. அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 18-ஆம் தேதி திருச்சியில் நான் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சமயம், எனக்கு ஒரு சீட்டு வந்தது. பிச்சை என்ற நபர் திருச்சியில் இருந்து திண்டுக்கல் வழியாக நெல் கடத்திச் செல்வதாக அதிலே குறிப்பிடப்பட்

டிருந்தது. அதிலே பெயர் உட்பட இருந்த காரணத்தாலே டி. எஸ். பி. அவர்களிடத்தில் அதனைக் கொடுத்து கண்காணிக்கச் சொன்னேன். அதன்பேரில் அன்று மணப்பாறை அருகே 102 மூட்டை நெல் பிடிக்கப்பட்டதாக தகவல் கிடைத்து, அவர்கள் கைது செய்யப்பட்டு மணப்பாறை போலீஸ் ஸ்டேஷனில் வைக்கப் பட்டார்கள்.

மு.ப. 11–00 **திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, பதுக்கலும், அதைத் தொடர்ந்து கடத்தலும் ஏற்படுகிறது. ஒவ்வொரு இடத்திலும் கடத்துவதற்கும், பதுக்குவதற்கும் தண்ணீரிலும், தரையிலும் லாரிகளும் பரிசல்களும் உபயோகப்படுத்தப்படு கின்றன. இம்மாதிரி பலவிடங்களில் கடத்தல் செய்கிற நிலை தொடர்ந்து இருக்கிறதே தவிர அவை ஒழுங்கான, வலுவான முறையில் தடுக்கப்படவில்லை என்ற புகார்கள் என் பகுதியில் நிறைய வந்து கொண்டிருக்கின்றன. இது சம்பந்தமாக மேலும் தீவிரமான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமா ? போக்கு வரத்து சாதனங்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கடத்தலைக் கண்காணிக்க ஆங்காங்கே செக் போஸ்ட்கள் போடப்பட்டிருக்கின்றன. போட் களில் போவதைக் கண்காணிக்கவும், கடல் மூலம் செல்லக் கூடும் என்று அதைக் கண்காணிக்க மீனவத் துறையிலிருந்து பாப்லோ போட்கள் எல்லாம் வழங்கி அதைக் கண்காணிக்கும் நிலையையும் உருவாக்கியிருக்கிறோம். மேலும் எந்தெந்தப் பகுதிகளில் கடத்தப்படுகிறது என்ற தகவலை கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தால் அரசாங்கம் நன்றியறிதலோடு இருக்கும். அந்த நல்ல காரியத்தை அங்கத்தினர் அவர்களும், பொதுமக்களும் முன் வந்து செய்ய வேண்டும். அதற்கு பொது ஜன கமிட்டி அமைத்து அரசாங்கத்திற்கு உதவி செய்தால் அதைக் கண்காணிக்கத் தயாரா யிருக்கிறோம்.

திரு. ஆர். நாகசுந்தரம் : கடந்த சில மாதங்களாக பெருவாரி யான விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த அரசுக்கு மனமுவந்து நெல் கொடுக்க முன்வந்துள்ளார்கள். அதோடு இப்போது அதிக உற்பத்தி இருப்பதால் விலையைக் குறைத்துக் கூட நெல் அளக் கிறார்கள் என்பது அரசுகளும், எதிர்க்கட்சியினருக்கும் தெரியுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நெல்லை வியாபாரிகள் வந்து வாங்கவில்லை, எங்களிடம் நெல் ஏராளமாக இருக்கிறது என்ற தகவல் வந்து கொண்டிருக்கிறது. எந்தெந்த மாவட்டங் களிலிருந்து தகவல் வருகிறதோ அந்தந்த மாவட்டக் கலெக்டர் களிடம் சொல்லி வியாபாரிகள் ஒழுங்காக கொள்முதல் செய்யும்படி சொல்லி வருகிறோம். தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விவசாயிகளிடம் தேங்கியிருக்கும் நெல்லை சர்க்கார் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அரசாங்கக் கொள்முதல் திட்ட அளவு எட்டு லட்சம் டன் என்று சற்று முன்பு அமைச்சர் அவர்

1967 நவம்பர் 24]

கள் கூறினார்கள். இதுவரையில் கொள்முதல் செய்யப்பட்ட அளவு எவ்வளவு ? தமிழ்நாடு முழுவதிலும் ஒரு படி அரிசித் திட்டத்தை செயல்படுத்துவதற்கு இந்த எட்டு லட்சம் டன் போதும் என்று அரசு கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இதுவரையில் 7,88,959 டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இரண்டாவது கேள்விக்கு பதில், எங்கெங்கு ரேஷன்—குடும்பக் கார்ட் திட்டம் இருக்கிறதோ அந்தப் பகுதிகளில் எல்லாம் ஒரு படி அரிசித் திட்டத்தை நிறைவேற்ற இந்த எட்டு லட்சம் டன் போதும், கூடுதலாகக் கொள்முதல் ஆகும் என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. இரா. மாணிக்கவாசகம் : சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விவசாயிகளுக்கு விலையைக் கூட்டித் தரவேண்டுமென்று உள்ள கோரிக்கையை முன்னாள் அரசாங்கம் இருந்தபோது கேட்காமல் இப்போது மட்டும் கேட்பதன் அடிப்படை நோக்கம் என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நெல்லுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று முன்னாள் இருந்த அரசாங்கத்தைக் கேட்காமல் இப்போதுள்ள அரசைக் கேட்கிறார்கள் என்று கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது தவறு. அவர்கள் இந்த அவையில் இருக்கிற ஒவ்வொரு நாளும் அதிக விலை, அதிக விலை, அதிக விலை என்பதை மறவாமல் சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள்.

Thiru K. Vinayakam : Sir, I have not been given an opportunity to put any supplementary question. I am the author of the main question.

கொள்முதல் செய்ய வேண்டுமென்று பூச்சாண்டி காட்டி மக்கள் வைத்திருக்கிறார்கள், பதுக்கல் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை அவர்கள் மீது சுமத்தி கெடுபிடியாக அந்தக் கொள்முதலைச் செய்வது தவறு என்று உயர்நீதி மன்றத்தில் வழக்கு போடப்பட்டு பிறகு தீர்ப்பு அளித்ததே—அதன் விளைவாக நீங்கள் போட்டிருக்கிற சட்டம் தவறு என்று தெரிந்து அதைத் திருத்த மாட்டீர்களா ? அதன்படி இப்போது கொள்முதல் செய்கிறீர்களா அல்லது பழைய தர்பார் நடத்துகிறீர்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் தேவையற்ற சில வார்த்தைகளை உபயோகப்படுத்தியதற்காக அவர்கள் பின்னால் வருந்துவார்கள் என்று கருதுகிறேன். கொள்முதல் என்பது பூச்சாண்டி அல்ல; கொள்முதல் என்பது நடைமுறையில் உள்ளதொரு திட்டம். கெடுபிடி என்பது இல்லை. அப்படி கெடுபிடி எங்கேயாவது செய்யப்பட்டிருந்தால் அப்படி செய்த அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் போட்ட சட்டம் ஹைகோர்ட்டால் நிராகரிக்கப்பட்டதாகச் சொல்வது தவறு. அந்தச் சட்டத்தை

அவர்கள் கட்சிக்காரர்கள்தான் போட்டார்கள். (ஆரவாரம்) அந்தச் சட்டம் ஹைகோர்ட்டாரால் தவறு என்று சுட்டிக்காட்டப் பட்டபிறகு அதைத் திருத்துகிற முயற்சியில் ஈடுபட்டு கொள் முதல் தகுந்த முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

Dr. H. V. HANDE : Sir, in answer to sub-clause (c) of the main question, the Hon. Minister has stated that 8 lakh tonnes of rice has been procured. But is he aware of the very unfortunate situation which has arisen now? Out of nearly 50 lakh tonnes of rice produced in the entire State, only 8 lakh tonnes have been procured and the balance of 42 lakh tonnes will have to be distributed or sold to the persons in the non-statutory rationing areas. In view of the fact that 42 lakh tonnes will not be sold through the agency of the State Govrnment, how do they propose to distribute it to the persons who are not in the statutory rationing areas. There is also ban in regard to the movement of foodgrains from one district to another and it may happen that persons who have got rice may not sell it. Is the Government aware of this anomalous situation and if so, what steps do they propose to take to set it right and not strick to the policy evolved by the previous Ministry?

The Hon. Thiru C. N. ANNADURAI : I am happy that my hon. Friend has raised an interesting point. We are having procurement only for certain rationing areas and family card pockets. Therefore we procure only 20 per cent of the produce. As my hon. Friend has pointed out, a major portion of the produce remains there with the producers and the agriculturists. That is why we think that we need not cater to the needs of the producers, agricultural labourers and others. As for the point, how this thing can be distributed, our calculation is that a major portion left with the producers is needed for their consumption and for the consumption of the agricultural labourers. If there is anything left over and above that and if the producers want it to be purchased, the Government are prepared to purchase it. Otherwise, if they allow these things to be distributed, as per the principles of gravitation, wherever there is money-power, more rice will gravitate towards that area and various pockets would be left in the lurch. That happened in the Thanjavur delta last year when the surplus rice was allowed to be migrated to other places. Thanjavur itself had to depend on ration.

திரு. எம். சி. பாலன் : தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தின் வழியாகக் கேரளாவிற்கு அரிசி செல்வதைத் தடுப்பதற்கு பதினுறு செக் போஸ்ட்கள் இருக்கின்றன. கடலோரம் வழியாக அரிசி செல்வதைத் தடுக்க விசைப்படகுகள் . . .

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வேறு தனிக் கேள்வியாக போடவேண்டும்.

1967 நவம்பர் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் என்னிடம் நேரில் வந்து, அரை மணி நேரம் கையை உயர்த்தியும் அவர்களை நான் துணை வினா கேட்க அனுமதிக்கவில்லை என்று கூறியதால் அனுமதித்தேன்.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : ஒரு ஏக்கருக்குக் கீழ் நிலம் உள்ளவர்களிடமிருந்து அதிகாரிகள் சர்க்கார் கொள்கைக்கு விரோதமாகக் கொள்முதல் செய்கிறார்கள் என்று எழுத்து மூலமாக புகார்கள் வந்திருக்கின்றனவா? அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்க உத்தேசித்திருக்கிறார்கள்? இதுபோன்ற பிழைகள் ஏற்படாமல் இருக்க ஜில்லா, தாலுகா மட்டத்தில் சர்வகட்சிக் குழுக்கள் அமைத்து இந்தக் கொள்முதல் விஷயத்தில் ஒத்துழைக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஒரு ஏக்கர் நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து சர்க்கார் அதிகாரிகள் கொள்முதல் செய்வதாக எழுத்து மூலமாக இதுவரையில் எந்தவிதமான தகவலும் வரவில்லை. ஆனால் மாறாக ஒரு ஏக்கர் சொந்தக்காரர்கள் கூட, நெல் இருக்கிறது, வாங்கிக் கொள்ளுங்கள் என்று எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த சிலர் ஆர். டி. ஓ. விடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அப்படி அவர்கள் கேட்டுக்கொண்டாலும் கூட வாங்கக் கூடாது என்றுதான் உத்தரவு போட்டிருக்கிறோமே தவிர ஒரு ஏக்கர் சொந்தக்காரர்களிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : ஒவ்வொரு ஜில்லாவிலும் 700, 800 ரெவின்யூ கிராமங்கள் இருக்கின்றன. ஆனால் 100 கிராமங்களுக்குத் தான் ரேஷன் அரிசி வழங்கப்படுகிறது; மீதி கிராமவாசிகள் பட்டினி கிடக்கக்கூடிய நிலை இருக்கிறது. அவர்கள் குறைச்சலான முறையில் உணவு தானியங்களை வாங்கிக் கொண்டு போனால் அவர்கள் ஹிம்சிக்கப்படுகிறார்கள். 296 பேர்களை அரஸ்ட் செய்திருக்கிறார்கள். அவர்களில் 100 ஏழைகள் அன்றாடச் சாப்பாட்டிற்கு வழியில்லாமல் வாங்கியவர்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இல்லாவிடில் அதைப் பற்றி விசாரணை நடத்த அரசாங்கம் தயாராயிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஏழைகளிடமிருந்து கொள்முதல் செய்யவேண்டுமென்ற நோக்கம் சர்க்காருக்குக் கிடையாது. அப்படி அங்கத்தினர் அவர்களுக்கு ஏதாவது தகவல் இருந்தால் தயவு செய்து அதைத் தெரிவிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். 296 கேஸ்களில் 100 கேஸ்கள் அப்படிப் பட்ட கேஸ்கள் என்று எந்தப் புள்ளிவிவரத்தைக் கொண்டு சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. அந்த தகவலைக் கொடுத்தால் அதைப் பரிசீலனை செய்து அத்தகைய நிரபராதிகளை விடுதலை செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. வி. டி. அண்ணாமலை : மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் தற்போது கொள்முதலுக்காகச் செலவழிக்கப்படும் தொகை எவ்வளவு என்று

அறிவிப்பார்களா? அப்படிக் கொள்முதல் செய்வதற்கு அதிகமான நிதியைச் செலவு செய்வதைக் காட்டிலும், எக்கருக்கு இவ்வளவு நெல் கொடுக்கவேண்டும் என்று லெவி முறையை வகுத்து, கொள் முதலுக்காக நியமித்திருக்கிற இவ்வளவு சிப்பந்திகளை வைத்துக் கொள்ளாமல், அவர்களையெல்லாம் அவர்களுக்குண்டான வேலை களுக்கு அனுப்பி, லெவி முறையில் நெல்லை வசூலிக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: லெவி பற்றிப் பரிசீலிக்கப் படும்.

* 418 Q.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the number of lorries seized by Procurement officials from 1st June 1966 to 31st March 1967 for unlawful transportation of paddy, rice and ragi in Tindivanam taluk; and

(b) the number of cases filed against the lorry owners and the owners of the food-grains and the number of cases among them, that went against the Government?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) திண்டிவனம் தாலுக்காவில் எந்த லாரியும் குறிப்பிடப்பட்ட நாட்களில் பிடிக்கப் படவில்லை.

(இ) வினுவுக்கு இடமில்லை.

* 419 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that one big foodgrains racket has been unearthed in Madras City by the Vigilance Cell, C.I.D., Madras State;

(b) if so, the details thereof; and

(c) the extent of public loss thereby?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) ஆம்.

(இ) சென்னை மாநகரில் மிகுதியான அளவில் உணவு தானியங்களை வாங்குவதற்கான போலிக்கார்டுகளும் (bogus bulk consumer cards) உணவுப் பங்கீட்டுக் குடும்பக் கார்டுகளும் (Retail cards) வழங்கப்பட்டுவரும் மோசடி 23—8—1966 அன்று அம்பலமாகியது. அன்று செங்கற்பட்டு மாவட்டக் கூட்டுறவு வழங்கல்—விற்பனைச் சங்கத்தின் பட்டியல் பிரிவைச் சேர்ந்த (Bills Section) எழுத்தர்கள் சிலருடைய பெயர்களில் போலி அனுமதிச் சீட்டுகள் இருப்பதாகக் கண்டு பிடித்தனர். பங்கீட்டு அலுவலகக் கண்காணிப்பாளர் ஒருவரது கையொப்பமும், உணவுப் பங்கீட்டுத் துறைத் துணை ஆணையர் (பங்கீடு) கையொப்பமும் அந்த அனுமதிச் சீட்டுகளில் மோசடியாகப் போடப்பட்டிருந்தன. மயிலாப்பூர் போலீஸ் நிலையம் இது குறித்து புலனாய்வு செய்து வருகிறது.